**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 29–ம் நாள் வியாழக்கிழமை வாதிகள் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **பாலலெட்சுமி** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**29.01.2026 OS.07/2023 வா.சா.2 பாலலெட்சுமி(கண்காணிப்பாளர்)**

**<u>வாதிகள் தரப்பில் முதல் விசாரணை</u>:**

1)நான் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு வந்த அழைப்பானையின் படி கடந்த 14.09.1969 ம் தேதியில் ஆதிமூலத் தேவர் மகள் பிச்சைமுத்துவிற்கும் சி.வா.வி.கருப்பையா தேவருக்கும் எங்கள் திருக்கோயிலில் திருமணம் நடைபெற்றதற்கான விவரங்கள் அடங்கிய திருமணப்பதிவேட்டின் அசலை கொண்டுவந்துள்ளேன். மேற்படி திருமணம் தொடர்பான பதிவுகள் அடங்கிய பக்க நகலை (வரிசை எண். 155)யை அசலுடன் ஒப்புமை செய்து தாக்கல் செய்கிறேன். **மேற்படி அசலுடன் ஒப்புமை செய்யப்பட்ட பக்க நகல் (வரிசை எண்.155) வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2) நான் தாக்கல் செய்துள்ள வ.சா.ஆ.7 ஆவணத்தில் தலைப்பில் உள்ள மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் வகையறா தேவசானத்தை சேர்ந்த எந்த கோவில் என்ற விவரம் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் சரிதான். மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் வகையறா தேவசானத்தை சேர்ந்த கோவில்கள் மதுரை மாநகரத்தில் எத்தனை உள்ளது என்றால் 7 கோவில்கள் உள்ளது. எங்கள் கோவிலில் திருமணப்பதிவேடு உள்ளதா என்றால் மேற்படி காலக்கட்டத்தில் பதிவேடுகள் பராமரிக்கப்படவில்லை தற்போது பதிவேடுகள் உள்ளது.

3) திருமண பதிவுகளை எங்கள் கோவில் பதிவேடுகளில் பதிவு செய்வதற்கு முன்பாக கிராம நிர்வாக அலுவலர் அல்லது Village head man ஆகியோர்கள் இடத்தில் மணமக்களின் வயது குறித்த சான்று பெற்றபின்பு

R VENKADESH PRASANTH Digitally signed by R VENKADESH PRASANTH Date: 2026.01.29 15:18:19 +0530

தான் பதிவு செய்வோம் என்றால் சரிதான் தற்போது அப்படித்தான் நடைமுறை உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வ.சா.ஆ.7 ஆவணத்தில்து வயது குறித்தோ கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்றிதழ் குறித்தோ அல்லது Village head man
கொடுத்த சான்றிதழ் குறித்தோ குறிப்புகள் எதுவும் இடம் பெறவில்லை என்றால் சரிதான்.

4) நான் கொண்டுவந்துள்ள பதிவேட்டில் பக்கங்கள் பிரிந்துள்ளது தைக்கப்படவில்லை என்றாலும் ஏற்கனவே தைக்கப்பட்டிருந்தது பிரித்து எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு சார்பு செய்யப்பட்ட சம்மனில் கண்ட திருமணப்பதிவேடு நான் கொண்டுவந்துள்ள ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. நான் கொண்டுவந்துள்ள பதிவேட்டில் திருமணப்பதிவேடு என குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1) நான் கொண்டுவந்துள்ள ஆவணம் சுமார் 55 ஆண்டுகளுக்கு முன்புள்ள ஆவணம் என்பதால் அதில் கிழிஞ்சல்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். பதிவேட்டின் பக்கங்களில் உள்ள தையல்கள் மட்டுமே பிரிந்துள்ளது தவிர அதிலுள்ள விவரங்கள் அழிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் கொண்டுவந்துள்ள ஆவணத்தின் பக்கங்களில் கண்ட விவரங்கள் தெளிவாக உள்ளது என்றால் சரிதான். 1969 ஆம் ஆண்டு வாக்கில் எங்கள் திருக்கோவிலில் நடைபெற்ற திருமணத்திற்கு என்னென்ன ஆவணம் தேவைப்படும் என்னென் விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டது என்ற விவரத்தை அன்றைய காலக்கட்ட அதிகாரிகளை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான்.

2) நான் கொண்டுவந்துள்ள ஆவணத்தில் கண்ட சங்கதிகளின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் கொண்டுவந்துள்ள ஆவணத்தில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு உட்பட்ட மண்டபங்களிலும் கட்டங்களிலும் நடைபெறும் திருமணத்திற்கு மட்டும் தான் வழங்கப்படும் பதிவுச்சான்று என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொண்டுவந்துள்ள ஆவணத்தில் திருமண தேதி என 14.09.1969 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் மணமகன் பெயர் வீ.கருப்பையா தேவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மணமகனின் தந்தை பெயர் வீரபத்திரதேவர் என நான் கொண்டுவந்துள்ள ஆவணத்தில்

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.01.29 15:18:25 +0530

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொண்டுவந்துள்ள ஆவணத்தில் வீரபத்திரதேவரின் தகப்பனார் பெயர் வாணித்தேவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) நான் கொண்டுவந்துள்ள ஆவணத்தில் மணமகன் ஊர் எனக் குறிப்பிட்டுள்ள காலத்தில் சொக்கநாதிருப்பு, மானாமதுரை தாலுகா, ராமநாதபுரம் ஜில்லா என்று உள்ளது என்றால் சரிதான். மணமகள் என்ற காலத்தில் பிச்சை முத்து எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பிச்சைமுத்துவின் தந்தை பெயர் சி.ரா.ஆதிமூலத்தேவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆதிமூலத்தேவரின் தந்தை பெயர் ராசுத் தேவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மணமகளின் ஊர் சொக்கநாதிருப்பு, மானாமதுரை தாலுகா, ராமநாதபுரம் ஜில்லா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) நான் கொண்டுவந்துள்ள ஆவணத்தில் மணமகன் கையெழுத்து என்ற இடத்தில் மணமகன் வீ.கருப்பையாதேவர் என கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். மணமகள் கையெழுத்து என்ற இடத்தில் ஆ.பிச்சை முத்து என கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி திருமணத்தை ஆசிர்வதித்த பட்டர் பெயர் கே.ராமநாதபட்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி திருமணத்திற்கு சாட்சிகளாக இருவர் கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகளின் கையொப்பம் கூட்டெழுத்தில் உள்ளதால் யாருடைய கையொப்பம் என குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். மேற்படி சாட்சிகளின் ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1வது சாட்சியின் ஊர் சொக்கநாதயிருப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2வது சாட்சியிடன் ஊர் சொட்டதட்டி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருமணத்திற்கு வசூலிக்கப்பட்ட கட்டணம் ரசீது எண்ணும் நான் கொண்டு வந்துள்ள ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொண்டு வந்துள்ள ஆவணத்தில் சான்று அளிக்கக்கூடிய மேலாளர் அல்லது பேஷ்கார் என்று குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அதிகாரி கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். தற்போதைய காலகட்டத்தில் தான் எங்கள் திருகோவிலில் நடைபெறும் திருமணத்திற்கு மணமகன் மணமகள் புகைப்படம் (Passport size), வயதை நிருபிக்க கல்வி சான்றிதழ், கிராம நிர்வாகை அலுவலர் சான்றிதழ் ஆகியவை தேவை என்றால் சரிதான். மேற்படி நடைமுறையானது மாண்பமை உயர்நீதிமன்றம் உத்தரவின் அடிப்படையில் பின்பற்றப்பட்டு வருகிறது என்றால் சரிதான். 1969 ஆண்டு காலகட்டத்தில் கிராம நிர்வாக அலுவலர் என்ற பதவி கிடையாது என்றாலும்

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.01.29 15:18:33 +0530

Village Headman தான் இருந்தார்கள் என்றாலும் சரிதான். நான் கொண்டு வந்துள்ள ஆவணம் எங்கள் திருக்கோவில் அலுவலகத்தில் உள்ள ஒரு பொது ஆவணம் என்றால் சரிதான். இதன் நகலை மூன்றாம் தரப்பினர் எளிதாக வாங்கி விட முடியாது என்றால் சரிதான். மணமகனோ மணமகளோ விண்ணப்பித்தன் பேரில் பெறலாம் என்றால் சரிதான். 1998 ஆம் ஆண்டில் மேற்படி மணமகன் மேற்படி திருக்கோவிலில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தின் சான்றிட்ட நகலை பெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் அன்றைய காலகட்டத்தில் திருக்கோவிலில் பணிபுரியாத காரணத்தினால் மேற்படி விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சான்றிட்ட நகலை அசலுடன் ஒப்புமை செய்து பார்த்தால் எனக்கு மேற்படி விபரம் தெரிய வரும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எங்கள் திருக்கோவில் அலுவலகத்தில் வழங்கப்பட்ட கடிதம் என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் மேற்படி ஆவணம் வாதிகள் தரப்பு ஆட்சேபணையோடு பி.வ.சா.ஆ.30 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. மேற்படி **பி.வ.சா.ஆ.30** ஆவணமானது இந்த வழக்கின் 2ம் வாதி ராஜாஜி 30.09.2022ம் தேதி மற்றும் 15.12.2022 ம் தேதிகளில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் எங்கள் திருக்கோவிலில் 14.09.1969 ல் வீ.கருப்பையா – பிச்சைமுத்துவிற்கும் நடைபெற்ற திருமண சான்றின் நகலையும் சாட்சி கையொப்பம் இட்டோர் விபரத்தையும் கேட்டு மனு செய்ததின் பேரில் மூன்றாம் தரப்பினரின் விபரங்களை தெரிவிக்க முடியாத காரணத்தினால் அதில் ஏதேனும் ஆட்சேபணை உள்ளதா என மணமகன் கருப்பையாவிற்கும் மணமகள் பிச்சை முத்துவிற்கும் மனுதாரர் ராஜாஜி க்கும் 21.12.2022 ம்தேதி பதில் அனுப்பப்பட்ட கடிதம் என்றால் சரிதான். அதற்கு மணமகன் கருப்பையா ஆட்சேபணை தெரிவித்து RPAD தபால் மூலம் எங்கள் அலுவலக பொது தகவல் அலுவலருக்கு 30.12.2022 ல் ஆட்சேபணை அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். **(மேற்படி ஆட்சேபணை குறித்த ஆவணம் சாட்சி ஒப்புக்கொண்டதால் வாதிகள் தரப்பு ஆட்சேபணையோடு பி.வ.சா.ஆ.31 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** . மேற்படி ஆட்சேபணை தெரிவித்தன் அடிப்படையில் மனுதார் ராஜாஜிக்கு கொடுக்கபடவில்லை என்றால் சரிதான். நான் கொண்டு வந்துள்ள ஆவணம் திருமணம் நடைபெற்றதற்கான ஆதாரபூர்வ ஆவணம் என்றால் சரிதான்.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.01.29 15:18:42 +0530

**வாதிகள் தரப்பு மறுவிசாரணை**

பி.வ.சா.ஆ.30 ஆவணத்தை மனுதாரர் ராஜாஜிக்கும் அனுப்பிதாக நான் எனது குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் மனுதாரர் ராஜாஜிக்கு நகல் அனுப்பிதற்கான குறிப்புகள் பி.வ.சா.ஆ.30 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.வ.சா.ஆ.31 ஆவணத்தை கருப்பையா எங்கள் கோவிலுக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.01.29 15:18:49 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam